Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.184/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 3 |
| | | Defence |
| | | Court |
| Name | : பிரமோத் | |
| Father / Husband Name | : யோஷ்வா | |
| Village | : பரளச்சி | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : டிரைவர் | |
| Religion | : | |
| Age | : 31 | |

( எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 23.03.2026

**முதல் விசாரணை :-**

1. நான் பரளச்சியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக

வேலை செய்து வருகிறேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தெற்குநத்தம் கிராமத்தில் ஒரு வளைகாப்பு நிகழ்ச்சிக்கு சமையல் உதவியாளராக நானும், என்னுடைய மாமாவான ராஜா என்பவரும் சென்றிருந்தோம். தெற்குநத்தம் கிராமத்தில் CSI கோவிலுக்கு அருகே ஒரு பெட்டிக்கடை இருந்தது. அந்த பெட்டிக்கடைக்கு கூல்ட்ரிங்ஸ் வாங்கி குடிக்கலாம் என அந்த கடைக்கு சென்றோம். அப்போது பரளச்சி காவல்நிலையத்தை சேர்ந்த எஸ்ஐ சார் அவர்கள் ரெய்டு செய்து கொண்டிருந்தார்கள். அந்த கடையிலிருந்து கணேஷ் புகையிலை பாக்கெட்டுக்களை கைப்பற்றினார்கள். எத்தனை பாக்கெட்டுகள் என்று எனக்கு தெரியாது. அந்த கடையின் உரிமையாளர் ஆஜர் எதிரி சேகர் ஆவார். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

2. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு புகையிலை போடும் பழக்கம் கிடையாது. போலீசார் என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்த தேதி மற்றும் மாதம் நினைவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் எந்த பொருளும் எதிரியின் கடையிலிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. நான் போலீசாரின் கையிருப்பு சாட்சி என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.03.23 17:43:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.